www.padippakam.com



# 600 கிறிஸ்தவர்களின் தலை வெட்டிய சங்கிலியன்

23

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

### வரலாற்றுத் தொடர்

கி.பி. 1498 இல் போர்த்துக்கல் நாட்டவனான வஸ்கொ து காமா (Vasco de Cama) ஆபிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வந்து, இந்தியாவிற்கான கடற்பாதையைக் கண்டுபிடித்த பின், போர்த்துக்கேயர்கள் வர்த்தக நோக்கத்திற்காக இந்தியாவிற்கு வந்து கோவா நகரத்தில் தங்கினார்கள். அக்கால கட்டத்தில் இந்தியா இலங்கை உட்பட தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் அரேபிய வர்த்தகர்களே வியாபாரம் செய்து வந்தார்கள். அப்போது அவர்களுடன் வர்த்தகத்தில் போட்டி போட முடியாது என்பதை உணர்ந்து கொண்ட போர்த்துக்கேயர்கள் அவர்களது கப்பல்களை கொள்ளையடிப்பதன் மூலம் தங்களுக்கு வேண்டிய பொருட்களையும் பெரும் செல்வத்தையும் பெற்றுக் கொள்ளலாம் என்று நம்பினார்கள்.


வியாபாரம் கடற்கொள்ளை நோக்கமாக மாற அவர்கள் அதற்கென்று தமது நாட்டில் இருந்து படைகளையும் பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளையும் கொண்டு வந்தார்கள் நாளடைவில் கடற்கொள்ளையில் அமோக வெற்றியும் பெரு இலாபமும் கிடைத்ததும் போர்த்துக்கேயரின் கவனம் நாடு பிடிப்பதில் திரும்பியது. கோவாவிலிருந்து வியாபார நிலையங்கள் எல்லாம் பலமிக்க இராணுவக் கோட்டைகளாக உருவாகியதோடு, கோவா மாநிலம் முதற்கொண்டு கேரள மாநிலம் கொச்சின் வரை அவர்களது காலனியாகியது.

கி.பி. 1518 இல் கொழும்புத் துறைமுகத்தில் போர்த்துக்கேயக் கடற்படை வந்து இறங்கிய போது இடி முழக்கம் ஒலித்த அவர்களது பீரங்கியின் வேட்டுக்களையும் இரத்தத்தின் நிறத்தையொத்த வைனைக் குடிப்பதையும், இரத்த நிறத்திலான ஜாமை பூசி பாண் சாப்பிடுவதையும் பார்த்து பயந்து போன கோட்டை இராச்சியப் படை வீரர்கள் தங்கள் மன்னன் பராக்கிரமபாகுவிடம் ஓடிச் சென்று வெள்ளை நிறமும் பூனைக் கண்ணும் பறட்டைத் தலையும் உடைய ஒரு சாதியினர் நமது துறைமுகத்தில் வந்து இறங்கியிருக்கின்றார்கள். அவர்கள் இரத்தத்தைக் குடிக்கின்றார்கள். இரத்தத்தைப் பூசி அப்பம்போன்ற எதையோ தின்கிறார்கள், அவர்களது கப்பல்களிலிருந்து இடி முழக்கம் போல சத்தத்துடன் நெருப்புக் கக்குகிறது என்று முறையிட்டபோது அதைக் கேட்டு நடு நடுங்கிப் போன 7 ஆம் பராக்கிரமபாகு ஓடோடிச் சென்று போர்த்துக்கேயருடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டு கொழும்பில் அவர்கள் வர்த்தக சாலை ஒன்றை அமைப்பதற்கும் கொழும்புத் துறைமுகத்தில் அவர்களது கப்பல்கள் தரித்து நிற்கவும் அனுமதி அளித்தான்.

கொழும்பில் நிலைமை இவ்வாறிருக்க குடா நாட்டிலே நல்லூரிலிருந்து ஆட்சி செய்த சிங்கைப் பரராசசேகரன் தனக்கு வயதாகி விட்டதால் தனது மூத்த மகன் சிங்கவாகுவிற்குப் பட்டங் கட்டினான். பரராசசேகரனுக்குப் பின் அரசாட்சி தனக்கே வரவேண்டும் என்று காத்திருந்த அவனது மூன்றாவது மனைவியின் மகன் சங்கிலிக்கு இது பெரும் ஏமாற்றத்தைத் தர அவன் சிங்கவாகுவிற்கு இரகசியமாக நஞ்சூட்டிக் கொன்று விட்டதாகச் சொல்லப்படுகின்றது. சங்கிலி தான் அதைச் செய்தான் என்பதை அறியாத பரராசசேகரன் தனது இரண்டாவது மகன் பண்டாரத்திற்கு முடிசூட்டிவிட்டு சங்கிலியையும் அழைத்துக் கொண்டு தென்னிந்தியத் திருத்தலங்களை தரிசிப்பதற்காக யாத்திரை சென்றான்.

அங்கு சங்கிலி செய்த குறும்பினால் தஞ்சாவூர் அரசன், அவனையும், பரராசசேகரனையும் பிடித்து சிறை வைத்து விட்டான். தந்தையும், தம்பியும் தஞ்சாவூர் சிற்றரசன் ஒருவனால் சிறைப்பிடிக்கப்பட்ட செய்தியறிந்து கோபம் கொண்ட பண்டாரம் தனது மற்றொரு தம்பியும் சிறந்த போர் வீரனுமாகிய பரநிருபசிங்கத்தை ஒரு படையுடன் அங்கு அனுப்பினான். கடும் சினத்துடன் தஞ்சை சென்ற பரநிருபசிங்கன் தஞ்சைப் படைகளுடன் போரிட்டு அவ்வூர் சிற்றரசனைத் தோற்கடித்து தனது தந்தையையும், தம்பியான சங்கிலியையும் சிறை மீட்டு வந்தான். அவனது வீரத்தையும் செயலையும் மெச்சிய பரராசசேகரன் பண்டாரத்திடம் சொல்லி கல்வியங்காடு, சண்டிலிப்பாய், அராலி, அச்சுவேலி, உடுப்பிட்டி, கச்சாய், மல்லாகம், என்னும் ஏழு கிராமங்களை அவனுக்குப் பரிசில்களாக கொடுத்து அவற்றிக்கு அவனை அதிபதியாக்கினான்.

இந்த பரநிருபசிங்கன் போர் கலையில் மட்டுமல்லாது வைத்தியத்திலும் கைதேர்ந்தவனாக இருந்தான். அவனது வைத்தியத் திறமையைக் கேள்வியுற்ற கண்டியரசன் தன்னுடைய மனைவியின் தீராத நோய் ஒன்றை குணப்படுத்த அவனை அங்கே வருமாறு அழைத்தான். அவனது அந்த அழைப்பை ஏற்று கண்டி சென்ற பரநிருபசிங்கன் நீண்ட காலமாக தீராதிருந்த கண்டி இராணியின் நோயை ஒரே மருந்தில் குணமாக்கிவிட்டு அநேக சன்மானங்களை பெற்றுக் கொண்டு திரும்பினான்.



இதற்கிடையில் அவன் கண்டி சென்ற தருணத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டே சங்கிலி கி.பி.1519 இல் தனது அண்ணனான பண்டாரத்தை கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதோடு தந்தை பரராசசேகரனையும் வீட்டுக்காவலில் வைத்தான். கண்டியில் இருந்து திரும்பிய பரநிருபசிங்கன் சங்கிலியின் செயல்களையறிந்து கடும்சினம் கொண்டு அவனைக் கொன்று முறைப்படி பண்டாரம் இறந்தபின் தனக்கு வரவேண்டிய ஆட்சியுரிமையை கைப்பற்ற விரும்பினான். கபட குணமும் காரியத்தில் கண்ணாயுமிருந்த சங்கிலி பரநிருபசிங்கனுடைய கோபத்தையறிந்து தந்திரமாக அவனிடம் சென்று அன்பொழுகப் பேசி நடித்து "வன்னியர்களின் சூழ்ச்சியால்தான் பண்டாரம் இறந்தான். நான் உனது நன்மை கருதியே இராச்சிய பாரத்தை ஏற்றுக்கொண்டேன். உனது ஆலோசனைப்படியே இராச்சியத்தை நடத்துவேன். உனது சொல்லைத் தட்டாமல் கீழ்ப்படிந்து நடப்பேன். உனது தம்பியான நான் அரசாண்டாலென்ன நீ அரசாண்டதற்குச் சமானம் தானே" என்றெல்லாம் சொல்லி தமையனைச் சம்மதிக்க வைத்து செகராசசேகரன் என்னும் பட்டம் தரித்து முறைப்படி தானே அரசனாக முடி சூடிக் கொண்டான்.

**சங்கிலி கி.பி.1519 இல் தனது அண்ணனான பண்டாரத்தை கொன்று ஆட்சியைக் கைப்பற்றியதோடு தந்தை பரராசசேகரனையும் வீட்டுக்காவலில் வைத்தான். கண்டியில் இருந்து திரும்பிய பரநிருபசிங்கன் சங்கிலியின் செயல்களையறிந்து கடும்சினம் கொண்டு அவனைக் கொன்று முறைப்படி பண்டாரம் இறந்தபின் தனக்கு வரவேண்டிய ஆட்சியுரிமையை கைப்பற்ற விரும்பினான்.**

அவ்வாறு முடிசூடிக்கொண்ட சில மாதங்களில் தனது படைத் தலைவர்களாக வன்னியர்களையும், மறவர்களையும் கத்திக்கார நம்பிகளையும் நியமித்து அவர்களது பலத்தின் அடிப்படையில் பரநிருபசிங்கனை புறக்கணித்துவிட்டான்.

தனது தம்பியினுடைய நய வஞ்சகச் செயலையறிந்து பரநிருபசிங்கன் பெருங்கோபம் கொண்டாலும், சங்கிலியினுடைய பெரும்படையுடன் மோத முடியாது அவனை வீழ்த்துவதற்கான சரியான தருணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

கி.பி. 1543-ம் ஆண்டில் மன்னார் கடற்பகுதி வழியாகச் சென்ற போர்த்துக்கேயரின் கப்பலை சங்கிலியனின் கடற்படை கைப்பற்றி விட்டதால் சங்கிலிக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் தகராறு மூண்டது.

அதற்கு முன் கி.பி. 1534-ல் கோட்டை அரசனாக இருந்த ஏழாம் விஜயபாகுவின் இளைய மகன் மாயாதுன்னை தன் தந்தை போர்த்துக்கேயருக்கு அடங்கி நடப்பதைக் கண்டு வெறுப்புற்று தந்தையைக் கண்டித்தான். அவனுடன் அவனது சகோதரர்களும் சேர்ந்து கொள்ள, போர்த்துக்கேயரின் ஆலோசனையின் பெயரில் விஜயபாகு தனக்குப்பின் ஆட்சியுரிமை தனது இரண்டாவது மனைவியின் பிள்ளைகளுக்கே என்று அறிவித்தான். இதனால் தனது தந்தை மீது இன்னும் கோபங்கொண்ட மாயாதுன்னை, யாழ்ப்பாணம் சென்று சங்கிலியனைச் சந்தித்து, போர்த்துக்கேயரை விரட்டுவதற்கு உதவி கோரினான். அவனது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சங்கிலி தன்னுடைய படைப் பிரிவொன்றை அவனுடன் அனுப்பி வைத்தான். சங்கிலியின் படைகளோடு கண்டியரசனின் படைகளையும் திரட்டிக்கொண்டு, கோட்டைக்குச் சென்ற மாயாதுன்னை, அங்கே போத்துக்கேயரின் கையாளாக இருந்த தனது தந்தையைக் கொன்றுவிட்டு தனது அண்ணன் ஏழாம் புவனேகபாகுவை கோட்டைக்கு அரசனாக்கிவிட்டு, தான் சிதாவாக்கை என்னுமிடத்திலிருந்து அரசாண்டான்.

**எனவே சங்கிலியனை அடிபணிய வைப்பதற்காக அவனது நாட்டிலே முதலில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப அவர்கள் விரும்பினார்கள். அதற்கான முயற்சிகளைச் செய்யுமாறு தென்னிந்தியக் கரையோரத்தில் மீனவர்கள் மத்தியில் மதப் பிரச்சாரமும் மத மாற்றமும் செய்து கொண்டிருந்த பிரான்சிஸ் சேவியர் என்பவருக்கு கட்டளையிட்டனர்.**

நாளடைவில் ஏழாம் புவனேகபாகுவை போர்த்துக்கேயர்கள் தங்களுடைய ஆளாக மாற்றிக் கொண்டனர். ஆனால் மாயாதுன்னைக்குப் படை உதவி செய்த சங்கிலி மீது அவர்களுக்குத் தீராத கோபம் இருந்தது.

எனவே சங்கிலியனை அடிபணிய வைப்பதற்காக அவனது நாட்டிலே முதலில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப அவர்கள் விரும்பினார்கள். அதற்கான முயற்சிகளைச் செய்யுமாறு தென்னிந்தியக் கரையோரத்தில் மீனவர்கள் மத்தியில் மதப் பிரச்சாரமும் மத மாற்றமும் செய்து கொண்டிருந்த பிரான்சிஸ் சேவியர் என்பவருக்கு கட்டளையிட்டனர். அதன்படி கி.பி. 1543-ல் மன்னாருக்கு வந்த அவர் அங்கிருந்த மீனவ மக்கள் 600 பேரை மத மாற்றம் செய்து கிறிஸ்தவர்கள் ஆக்கியதோடு தன்னுடைய பெயர் கொண்ட இன்னொருவரை அவர்களுக்கு குருவானவராக நிறுத்திவிட்டுச் சென்றார்.

இதைக் கேள்விப்பட்ட சங்கிலி கி.பி. 1544-ம் ஆண்டு மார்கழி மாதம் மன்னாருக்கு படையுடன் சென்று, கிறிஸ்தவர்களாக மதம் மாறிய 600 பேருக்கும் தலைவெட்டியதோடு அவர்களது குருவான பிரான்சிஸ் சேவியரையும் கொன்றுவிட்டான்.

**- நக்கீரன்**

படிப்பகம்